## பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாவட்டம், மங்கலம் ரோடு, பெரியாண்டிபாளையம், முல்லை நகரைச் சேர்ந்த லஷ்மணன் மகன் பழனிவேல் என்பவர் அருள்முருகன் என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தை நடத்தி வருகிறார். மேலும் ஒப்பந்ததாரரான இவர் திருப்பூர் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த பணிகளை செய்து வருகிறார். திரு.பழனிவேல், திருப்பூர் மாநகராட்சி வார்டு எண் 4ல் தோட்டத்துப்பளையம் தெற்கு செல்போன் டவர் வீதியில் ஆழ்துளை கிணற்றில் பழுதடைந்த மின் மோட்டார், பேனல் போர்டு, கேபிள் மற்றும் குழாய்கள் மாற்றியமைக்கும் பணியை ரூ.4,30,000/-க்கும், திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு பணியை ரூ.3,50,000/-க்கும், ஜெ. ஜெ. நகர் எம். ஜி. ஆர் காலனி பகுதிகளில் பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு பணியை ரூ.2,10,000/-க்கும், வார்டு எண்-31, அப்பாச்சி நகர் 3வது தெருவில் சின்டெக்ஸ் டேங்க் அமைக்கும் பணியை ரூ. 3,15,000/-க்கும், கொங்கு நகர் 2வது தெருவில் சப்மெர்சிபிள் பம்ப்செட் அமைக்கும் பணியை ரூ. 3,00,000/-க்கும், வார்டு எண்கள்-28,30 தேவாங்கபுரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி வளாகத்தில் பேவர் பிளாக் அமைக்கும் பணியை ரூ. 6,00,000/-க்கும் ஆக மொத்தம் ரூ.22,05,000/-க்கு பணிகளை டெண்ட எடுத்து பணிகள் செய்து முடித்துள்ளார். இதில் கடைசியாக திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு பணியை கடந்த ஜூன் மாதம் முடித்துள்ளார். திருப்பூர் மாநகராட்சி மண்டலம் -2ன் இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகரன் கடைசியாக செய்து முடித்த திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு பணியை தவிர மற்ற 5 பணிகளுக்கான அளவீடுகளை M-bookகளில் பதிவு செய்து பில்களை அக்கவுண்ட் செக்சனில் கொடுத்துள்ளார். 5 பில்களில் ஒரு பில்லுக்குண்டான தொகை மாநகராட்சியால் விடுவிக்கப்பட்டும் மற்ற 4 பில்களுக்கான தொகை இன்னும் விடுவிக்கப்படாமல் நிலுவையில் உள்ளது. இந்நிலையில் திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு பணிக்கான அளவீடுகளை M-Bookல் எழுதி அக்கவுண்ட் செக்சனுக்கு அனுப்புமாறு வாதி திரு.பழனிவேல், இளநிலை பொறியாளர் திரு.சந்திரசேகரன் என்பவரை கடந்த ஜீன் மாதத்தில் ஒரு நாள் சந்தித்து கேட்டதற்கு மொத்தம் ரூ.22,05,000/-க்கு நீர் வேலை செய்துள்ளதால் மேற்படி 6 வேலைகளுக்கும்

சேர்த்து தனக்கு பணம் ரூ.25,000/- தர வேண்டும் என லஞ்சம் கேட்டுள்ளார். திரு.பழனிவேல் பலமுறை நேரிலும் செல்போன் மூலமாக திரு.சந்திரசேகரனிடம் கேட்டும், தான் கேட்ட பணத்தை கொடுத்தால் தான் M-Book எழுதி, பில்லை தயார் செய்து மாநகராட்சிக்கு அனுப்புவேன் என்று கூறியுள்ளார். இந்நிலையில் 10.10.2023, 14.10.2023, 16.10.2023 மற்றும் 18.10.2023 ஆகிய தேதிகளில் திரு.சந்திரசேகரன், செல்போனில் திரு.பழனிவேலை தொடர்பு கொண்டு லஞ்சமாக பணம் ரூ.25,000/-கேட்டுள்ளார். அதனால் 19.10.2023ம் தேதி திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திருப்பூர் மாநகராட்சி 2ம் மண்டலத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திரு. சந்திரசேகரன் என்பவர் மீது திரு.பழனிவேல் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து இளநிலை உதவியாளர் திரு. சந்திரசேகரன் அவர்களை குமார் நகரில் உள்ள அவரது அலுவலகத்தில் திரு.பழனிவேல் சந்தித்து, திருமலை நகர் டேங்க் முதல் நெருப்பெரிச்சல் வரை பி.வி.சி. குழாய் விஸ்தரிப்பு செய்த பணிக்கான அளவீடுகளை M-Bookல் பதிவு செய்து, பில் தயார் செய்து மாநகராட்சிக்கு அனுப்புவது குறித்து கேட்ட போது இளநிலை உதவியாளர் திரு. சந்திரசேகரன் பணம் ரூ.25,000/-ஐ லஞ்சமாக கேட்டுப் பெற்றுக் கொண்ட போது திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவினால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார்.